**தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்**

**&**

**இந்தியவானிலைத் துறை**

**தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிறுவனம் - ஆடுதுறை**

**கரூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

**(26.04.2025 முதல் 30.04.2025)**

**அறிக்கை எண் 08/2025** **தேதி. 25.04.2025**

**கரூர் மாவட்டத்தின் கடந்த வார வானிலை**

கரூர் மாவட்டத்தின் 22.04.2025 மற்றும் 24.04.2025 வரையிலும் பகல்நேரவெப்பநிலை 39 °செ ஆகவும் இரவு நேர வெப்பநிலை 27 - 28 °செ ஆகவும் காலை நேரகாற்றின் ஈரப்பதம் 70 சதவிகிதமாகவும், மாலைநேரகாற்றின் ஈரப்பதம் 39 சதவிகிதமாகவும் பதிவானது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 11 - 12 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் தென் கிழக்கு திசை வரை பதிவானது.

**எதிர்பார்க்கப்படும் வானிலை கரூர் (26.04.2025 முதல் 30.04.2025)**

| கடந்த வார வானிலை (22.04.2025 மற்றும் 24.04.2025) | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு 30.04.2025- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 22/04 | நாள்-2 23/04 | நாள்-3 24/04 | தேதி | நாள்-1 26/04 | நாள்-2 27/04 | நாள்-3 28/04 | நாள்-4 29/04 | நாள்-5 30/04 |
| 0.0 | 0.0 | 0.0 | மழை (மி.மீ) | 1 | 0 | 1 | 0 | 1 |
| 39 | 39 | 39 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 40 | 40 | 39 | 40 | 39 |
| 28 | 27 | 28 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 28 | 29 | 28 | 29 | 29 |
| 5 | 5 | 3 | மேக மூட்டம் (ஆக்டா) | 6 | 5 | 5 | 7 | 7 |
| 74 | 64 | 70 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 80 | 70 | 70 | 70 | 70 |
| 39 | 36 | 37 | குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%) | 30 | 20 | 30 | 20 | 30 |
| 12 | 11 | 12 | காற்றின் வேகம் (கி.மீ /மணி) | 14 | 10 | 12 | 8 | 10 |
| கிழக்கு வட கிழக்கு | கிழக்கு தென் கிழக்கு | தென் கிழக்கு | காற்றுவீசும் திசை | தென் கிழக்கு | தென் தென் கிழக்கு | தென் கிழக்கு | தெற்கு | தென் தென் மேற்கு |

**கரூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

வரும் நாட்களில் வானம் தெளிவாக காணப்படும். 26.04.2025, 28.04.2025 மற்றும் 30.04.2025 ஆகிய தினங்களுக்கு லேசான தூரல் மழை எதிர்பார்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 39 - 40 °செ ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலை 28 - 29 °செ ஆகவும், காலைநேரகாற்றின் ஈரப்பதம் 80 சதவிகிதமாகவும், மாலை நேரகாற்றின் ஈரப்பதம் 30 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்று மணிக்கு 8 - 14 கி.மீ வேகத்தில் வீசக்கூடும். காற்று பெரும்பாலும் தென் கிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

**வேளாண் அறிவுரைகள்**

| | | |
|---|---|---|
| **பொது** | | வெப்பநிலை சற்று உயர்ந்து வருவதால் பயிர் கழிவு மூடாக்கு இட்டு மண் ஈரத்தினை பாதுகாக்கவும். |
| **நெல்** | **நாற்றாங்கால்** | கோடை பருவத்திற்கு ஏற்ற குறுகிய கால நெல் இரகங்களான ஆடுதுறை 53, ஆடுதுறை 56, ஆடுதுறை 57 மற்றும் ஆடுதுறை 59 விதைகளை தேர்ந்தெடுக்கவும் |

| | | |
|---|---|---|
| **பயறுவகை பயிர்கள்** | **விதைப்பு** | கோடை இறவை பயிராக சித்திரைப்பட்டத்தில் ( ஏப்ரல் - மே) பயறுவகை பயிர்களை விதைக்க உகந்த இரகங்களான ஆடுதுறை 5, வம்பன் 5, வம்பன் 6 மற்றும் வம்பன் 8 போன்ற உளுந்து இரகங்களையும் வம்பன் 2 மற்றும் வம்பன் 3 போன்ற பாசிப்பயறு இரகங்களையும் பயிரிடவும். |
| | **அறுவடை** | *உளுந்து மற்றும் பாசிபயறு செடிகளை அறுவடை செய்யவும். ஓரிரு நாட்கள் செடிகளை நன்கு வெயிலில் காயவைத்து பின்பு பயறைப் பிறித்தெடுத்து சுத்தம் செய்து ஈரப்பதம் **9** சதவீதத்திற்கு குறையும் வரை உலர்த்தி பின்பு சேமிக்கவும்* |
| **வாழை** | | *வாழை மரங்கள் காற்றினால் சாயாமல் இருக்க வாழை மரங்களுக்கு முட்டுக்கொடுத்து பாதுகாக்கவும்.* |
| **கால்நடைகளுக்கு** | **ஆடு மற்றும் மாடு** | ***3*** *மாத வயதுடைய கன்று குட்டிகள் மற்றும்* ***2*** *மாத வயதுடைய ஆட்டு குட்டிகளுக்கு கோமாரி நோய் வராமல் தடுக்க தடுப்பூசி போடவும்.* |
| | | *அடுத்த சில தினங்களுக்கு பகல் நேர வெப்ப நிலை அதிகரிக்க வாய்ப்புள்ளதால் தங்களின் கால்நடைகளை காலை மற்றும் மாலை வேளைகளில் மேய விடுவதுடன் நண்பகல் நேரத்தில் நிழல் பகுதியில் நிறுத்தி வைக்கவும்.* |

## குறுஞ்செய்தி

வெப்பநிலை சற்று உயர்ந்து வருவதால் பயிர் கழிவு மூடாக்கு இட்டு மண் ஈரத்தினை பாதுகாக்கவும்.

**இயக்குநர்**